[1971 ஜூலை 30

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நாட்டைப் பொதுவாகத்தான் கொண்டு கணக்கிடப்படுகின்றது. 18 சதவீதம் என்பது அந்த வகையிலேதான் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தந்த நகரத்தின் அமைப்பு அந்தந்த ஊரின் அமைப்பு என்று வருகின்ற நேரத்தில் அந்த எண்ணிக்கை பொருந்தி வருமா என்பது சந்தேகம். அவர்களுக்கு உறுப்பினர்களாக வருகின்ற நிலைமையே இல்லாமல் போய்விடுமோ என்ற நிலைமையிலேதான் அந்த எண்ணிக்கை தரப்பட்டிருக்கிறது. தலைவராக வரவேண்டுமென்றால் ஒரு மரபையொட்டித்தான் அது சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையிலே செய்யப்படுகிறது. சட்டத்தின் அடிப்படையிலே அல்ல. எனவே, அந்த மரபின் அடிப்படையிலே சென்னை மாநகராட்சி மன்றம் ஒரு முறையைக் கையாண்டு வருகின்றது.

அரசினர் மருத்துவமனை, மாயூரம்

* 557 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசினர் மருத்துவமனையில் கண்நோய் சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கண்நோய் மருத்துவமனையோடு இணைந்த ஒரு நடமாடு கண் நோய் மருத்துவமனையை ஏற்படுத்தி வாரம் ஒரு முறை மாயூரம் போன்ற முக்கிய நகரங்களுக்கு அனுப்புகின்ற யோசனையை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனையைப் பரிசீலிப்பதற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை. ஆனால் அதற்குப் பதிலாக வட்ட மருத்துவ மனைகளிலே எந்த எந்த மருத்துவ மனைகளிலே கண்நோய் மருத்துவப் பகுதிகள் தொடங்கலாம் என்பதை ஆராய்ந்து பார்த்து அரசாங்கத்திற்கு ஆலோசனை சொல்வதற்காக ஒரு நிபுணர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் பல்வேறு மருத்துவமனைகளுக்கும் சென்று பார்த்து எந்த எந்த இடங்களில் அப்படிப்பட்ட பிரிவுகளை ஏற்படுத்தலாம் என்று அரசாங்கத்திற்கு அண்மையிலே தெரிவிக்க இருக்கின்றார். அவர் தெரிவித்த பிறகு அதை ஆலோசனை செய்து இயன்ற அளவுக்கு அந்தப் பகுதிகளிலே அவை ஏற்படுத்தப்படும்.

* 558 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் இரத்த சேமிப்பு நிலையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாயூரம் அரசாங்க மருத்துவமனையில் ஒரு குருதி சேமிப்பு நிலையம் திறப்பதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.